1

மௌனத்தின் குரல்

குத்திட்ட பார்வையுடன் சரஸ்வதி உட்கார்ந்திருந்தாள். அறையின் கம்பிக் கதவுக்கு அப்பால் டாக்டர் நின்றிருந்தார். அவருடன் வெள்ளை ரவிக்கையும் வெள்ளைப் புடவையுமாக ஓர் அம்மாள் நின்றிருந்தாள்.

அவர்கள் பார்வையிலிருந்து தப்பிக்க நினைத்தவள் போல் சரஸ்வதி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அறையில் உட்கார்ந் திருந்த மற்ற இரண்டு பெண்களுக்கு டாக்டரின் பேச்சோ, இரண்டு பேர்கள் தங்களை ஆராய்கிறார்கள் என்கிற உணர்வோ பிரக்ஞை யைத் தாக்கியதாகத் தெரியவில்லை.

''இந்தக் கேஸ் இப்படித்தான்'' என்றார் டாக்டர். ''டிப்ரெஷன் கேஸ். காரணம் என்னன்னு சில கேஸ்லேதான் உறவுக்காரங்க மூலமாத் தெரியும். சில கேஸ்ல கண்டே பிடிக்கமுடியாது. என்ன கேட்டாலும் உதைச்சாலும் வாயைத் திறக்காது. ஒரு வார்த்தை பேசாது. வயலன்டா ஆகாது.''

''இங்கே இருக்கிற மூணு பேருக்கும் எதனாலே டிப்ரெஷன்னு தெரியாதா?''

''இரண்டு பேர் கேஸ் ஹிஸ்டரி தெரியும். அங்கே மூலையிலே உட்கார்ந்திருக்காளே சின்னாயி, அவளுடைய மூணு குழந்தைங்க

விபத்திலே இறந்துட்டாங்க. அன்னிலேர்ந்து வாயடைச்சுப் போயிட்ட தாம். வீட்டை விட்டு வெளியிலே போயிடறான்னு இங்க கொண்டு வந்து விட்டிருக்காங்க. நடுவிலே உட்கார்ந்திருக்கிறவ சாந்தம்மா. புருஷன் திடீர்னு செத்துப் போன அதிர்ச்சியிலே இப்படி ஆயிட்டா. இவளைப் பார்த்துக்கிறவங்க யாருமில்லே. இங்கே சிகிச்சையும் கிடைக்கும், பாதுகாப்பும் இருக்கும்னு யாரோ கூட்டிட்டு வந்தாங்க. அதோ அந்த மூலையிலே முகத்தைத் திருப்பிக்கிட்டு உட்கார்ந் திருக்காளே சரஸ்வதி, அவளைப் பத்தித்தான் ஒண்ணும் தெரியல்லே- கல்யாணம் ஆகியிருக்கு. வீட்டுக்கு ஓடி வந்துட்டா. சிகிச்சைக்காக அண்ணன் கொண்டு வந்து விட்டிருக்கான். மற்றவங்களைவிட இவ ஷார்ப்.''

''யாரையாவது குணப்படுத்தி அனுப்பியிருக்கீங்களா?''

''ஓ, அனுப்பியிருக்கமே! ஆனா பாதி நேரம் இவங்க உறவுகாரங்களே இவங்களுக்கு விரோதிங்க. மறுபடி எதையாவது ஏறுமாறாச் சொல்லி இங்கே வந்து சேரும்படி பண்ணிடுவாங்க. நாங்க வைத்திபம்தான் செய்ய முடியும். சமூகத்தை மாத்தறது உங்களைப் போலவங்கதான் செய்யணும்.''

வெள்ளைப் புடவை அம்மாளின் முகத்தில் யோசனை தெரிந்தது.

''பேசறதில்லேன்னா வேற எந்த உணர்ச்சியையும் கூடக் காண்பிக்கிறதில்லையா?''

''அழுவாங்க. வேறு எந்த உணர்ச்சியையும் காட்டறதில்லே. பசிச்சாலும் கேட்கத் தெரியாது. ஆனா வேளா வேளைக்குச் சோத்தைப் போட்டா நல்லா சாப்பிடும். உடம்பு எப்படியிருக்கு பாருங்க, ஒவ்வொண்ணுக்கும். கிழங்கு மாதிரி!''

சரஸ்வதி பாவாடையை நன்றாக இழுத்து மூடிக்கொண்டு முழங்காலை உயர்த்திக் கையைக் கட்டிக்கொண்டு முகத்தைக் கவிழ்த்துக்கொண்டாள். வெறும் உள் பாவாடை, மேலே பாடியில்லாத, இப்பொழுது இறுக்கமாகப் போய்விட்ட ரவிக்கை.

''இவங்களுக்கு ஒழுங்காப் புடவை கட்டி வைக்கலாம் நீங்க.''

''அதிலே ப்ராப்ளம் வருது மேடம்! அவிழ்த்துப் போட்டுட றாங்க. நூலேணி மாதிரி புடவையை ஆணியிலே கட்டி ஒரு பெண் தப்பிச்சு ஓடிட்டா. இன்னொருத்தி சுருக்குப் போட்டுக்கிட்டுச் செத்துப் போனா!''

''உடம்பை மூடறாப்பலே மாக்ஸி போடலாம்.''

டாக்டர் சிரித்தார்.

''அட, நீங்க ஒண்ணு! இதைப் பத்தின பிரக்ஞையெல்லாம் இவங்களுக்குக் கிடையாது.''

சரஸ்வதி பழைய நிலைக்கு முகத்தைத் திருப்பியபோது டாக்டரும் அந்த வெள்ளைப் புடவையும் இல்லை.

பூட்டிய கம்பிக்கதவுக்கு வெளியே காவல்கார முனுசாமி ஸ்டூலில் அமர்ந்து வெற்றிலைக்கு நிதானமாகச் சுண்ணாம்பு தடவினான். மடியில் இருந்த சுருக்குப் பையிலிருந்து புகையிலைச் சுருளைக் கொஞ்சம் போல் எடுத்து உள்ளங்கையில் தேய்த்துச் சுருட்டிக் கடை வாய்க்குள் செருகிக் கொண்டான். இடையில் அவள் பக்கம் திரும்பி,

''என்ன சரஸ்வதி?'' என்று சிரித்தான்.

அவள் மீண்டும் முழங்காலில் தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

ஓசை. சுற்றிலும் ஓசை. சமுத்திர ஓசை. ராட்சஸ அலைகள். கரும் நீலமாய், பச்சையாய் நுரையின் வெளுப்பாய் முத்துக்களை வாரி இறைத்து அவளை அழைக்கின்றன. கரையில் தயங்கி நிற்கும் அவள் பாதங்களின் அடியில் மணல் சரிந்து பூமி சரிகிறது. பயமேற்படுகிறது.

''புருஷனும் மாமியாரும் சொல்றபடி கேட்டுக்கிட்டு, சமத்தா இருக்கணும் என்ன?'' என்று அண்ணன் சொல்கிறான்.

''உன் தங்கச்சி ஒரு வாயில்லாப் பூச்சி. அதெப்படி கிங்கரன் மாதிரி ஒரு மாப்பிள்ளை புடிச்சே? மாமியார்காரியுடைய அலங்காரமும் பாந்தமா இல்லே!''

''கொஞ்சம் பசையுள்ளவங்க, வித்தியாசமாத்தான் இருப்பாங்க.''

''இது மகா சாது. பாவம்!''

''எல்லாம் நல்லாப் பாத்துப்பாங்க!''

சமுத்திர நீரில் கால் வைக்க இன்னும் பயமாக இருக்கிறது. அசுர அலைகள் கபளீகரம் செய்துவிடும் என்று பயமேற்படுகிறது.

''தூத்தெறி! இதென்ன பயம் உனக்கு? நான் உன் புருஷன் தானேடி? புருஷன்தானே?''

அவளுக்கு மூச்சு முட்டுகிறது. பூமி காலுக்கடியில் ஒரேயடியாய்ச் சரிவது போல் தடுமாற்றமேற்படுகிறது. அலை ஓசை எத்தனை பயங்கரம்!

அந்த ஓசைக்கு மேல் மாமியார் கொண்டையில் ஊசி செருகியபடி சிரிக்கிறாள்.

''இரண்டே மாசம்-சரி பண்ணிடலாம் கவலைப்படாதே.''

மீண்டும் ஓசை. காதைப் பொத்தியபடியே எழுந்து சரஸ்வதி சன்னலருகில் சென்று நின்று கொண்டாள்.

சன்னலை ஒட்டினாற் போல் ஆஸ்பத்திரியின் பிரும்மாண்டச் சுவர் தெரிந்தது. மேலே இருந்த நீல வானத்தைக் கூட மறைத்தது.

அவள் உள்பக்கம் நோக்கினாள். அறையின் நட்ட நடுவில் காலை நீட்டிக் கொண்டு சாந்தம்மா வெறித்த பார்வையுடன் உட்கார்ந்திருந்தாள். ரவிக்கையில் இரண்டு பித்தான்கள் இல்லை.

இடது மார்பின் கருவட்டம் தெரிந்தது. உள்பாவாடையின் இடை சின்னதாகிப் போய் நாடா கட்டியிருந்த இடத்தில் முக்கோணமாய் இடைவெளி தெரிந்தது.

சாந்தம்மாவின் அருகில் கல்லைப் போல் உட்கார்ந்திருந்த சின்னாயி திடீரென்று அழ ஆரம்பித்தாள். காதைப் பொத்திய நிலையிலேயே சரஸ்வதி அவள் அழுவதைச் சலனமில்லாமல் பார்த்தாள். சின்னாயியின் அழுகை பலமாயிற்று.

''ஆரம்பிச்சிடுச்சி ரோதனை!'' என்று முனுசாமி அலுத்துக் கொண்டான்.

''ஏய் சும்மாக் கிட!'' என்று ஒரு அதட்டல் போட்டான்.

சின்னாயிக்கு அது காதில் விழுந்ததாகத் தெரியவில்லை. தாங்க முடியாத துக்கத்தைக் கரைப்பவள் போல் குலுங்கக் குலுங்க அழுதாள்.

கம்பிக் கதவின் பூட்டு திறந்தது. முனுசாமியைத் தொடர்ந்து வார்ட் அம்மா கங்குபாய் உள்ளே நுழைந்தாள். ஒரு அங்குலக் கறுப்புக் கரையிட்ட வெள்ளைப் புடவையின் கஞ்சி விறைப்பில் கோபம் பளிச்சிட்டது.

கங்குபாய் கூர்மையாகச் சின்னாயியைப் பார்த்தாள்.

''ஊம், விட்டுப் பிடிக்கணும். வேற ஒண்ணும் செய்யறதுக் கில்லே.'' என்றாள். ''அதட்டி அடிச்சம்னா அழுகை அதிகமாகும். கண்டுக்காதே!''

''கண்டுக்காமே இருக்கலாம்னுதான் பார்க்கறேன்,'' என்று முனுசாமி மெல்லிய குரலில் முணுமுணுத்தான். ''சொல்லி வெச்சமாதிரி நாலு நாளாத்தான் தினமும் அழறா!''

சட்டென்று கங்குபாய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''அப்ப, இவளைக் கொஞ்சம் விட்டுப் பிடிப்போம்.''

''அதுதான் சரி.''

கங்குபாய் தீவிரச் சிந்தனையுடன் நடுவில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்த சாந்தம்மாவைப் பார்த்தாள். பிளந்திருந்த ரவிக்கையின் கழுத்தை மூடும் யத்தனத்தில் குனிந்து மேல் பித்தானை அமுக்கினாள். போட்ட வேகத்திலேயே உடம்பின் பிடிப்பில் பித்தான் பட்டென்று திறந்தது. திறந்த அதிர்ச்சியில் மிகுதிப் பித்தானும் அவிழ்ந்து இரண்டு மார்பும் நிர்வாணமாய் முனுசாமியின் பார்வையில் சிக்கின.

''சிஸ்டரைக் கூப்பிட்டுப் பெரிய அளவு ரவிக்கை போடச் சொல்லணும்!'' என்று கங்குபாய் முணுமுணுத்தாள்.

முனுசாமி தன் பார்வையை அகற்றாமல் சிரித்தான்.

''கொஞ்சமாவா துன்னுது! வேலைவெட்டியும் செய்யற தில்லே!''

கங்குபாய் குனிந்து கீழ் பட்டனைப் பழையபடிக்குப் போட்டாள்.

ஸ்பரிசத்தையும் பார்வையையும் உணராத பரப்பிரும்மமாய் சாந்தம்மா உட்கார்ந்திருந்தாள்.

''எப்படி உட்கார்ந்திருக்கா பாருங்களேன்!'' என்று முனுசாமி சிரித்தான். ''இவளை மாவாப் பிசைஞ்சாலும் சுரணை இருக்காது!''

''சும்மா கிட முனுசாமி!'' என்று கங்குபாய் கம்பிக் கதவை ஒரு பார்வை பார்த்துவிட்டு மெலிதாக அதட்டினாள். ''நேத்து இதுங் களைக் குளிப்பாட்டற ஆயா கேட்டா, ரூமுக்குள்ளாற உக்காந் திருக்கிற சின்னாயி கால்லே எப்படி வயக்காட்டிலே நடந்தமாதிரி சகதியாயிருக்குன்னு!''

முனுசாமி வியப்பைக் காட்டாமல் முணுமுணுத்தான்.

கங்குபாய் அகன்றதும் முனுசாமி சாந்தம்மாவின் எதிரில் வெறித்த பார்வையுடன் நின்றான்.

''என்னதான் மண்டை காலியானாலும் கொஞ்சம் சுரணை வேண்டாம்?'' என்றான்.

பிறகு சரேலென்று குனிந்து அவளுடைய இடது மார்பைக் கையால் திருகிவிட்டு நிமிர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்த சரஸ்வதியைக் கண்டு கண்சிமிட்டினான்.

''உடம்பிலே ஓடற ரத்தம் என்னவோ சூடாத்தான் இருக்கு!'' என்றபடி இன்னும் அழுது கொண்டிருந்த சின்னாயியை ஒருமுறை அலுப்புடன் பார்த்துவிட்டுச் சாவதானமாக நடந்து அறைக்கதவைப் பூட்டி வெளியே ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டான்.

மெல்ல மெல்ல சின்னாயியின் அழுகை ஓய்ந்து அறையில் மீண்டும் நிசப்தம் கவிழ்ந்தது. இருள் விரியத் தொடங்கியதும் சாப்பாட்டு வண்டி பெரிய சத்தத்துடன் வார்டுக்குள் நுழைந்தது. கங்குபாயின் மேற்பார்வையில் முனுசாமி சாப்பாட்டை வாங்கி வைத்தான். வண்டி நகர்ந்ததும் கங்குபாய் முனுசாமியிடம் மெல்லிய குரலில் சொன்னாள்.

''சாந்தம்மாவுக்கு இப்ப சோறு கொடுக்காதே. சாப்பிட்ட உடனே தூங்க ஆரம்பிச்சான்னா கும்பகர்ணன் கதைதான்.''

''சரி.''

மற்ற இருவரும் சாப்பிடுவதை சாந்தம்மா வெறித்த பார்வையுடன் பார்த்தாள்.

சாப்பாட்டுக் கடை முடிந்ததும் முனுசாமி விளக்கை அணைத்து, ''படுங்க!'' என்று குரல் கொடுத்துக் கதவைப் பூட்டினான்.

சாந்தம்மா சற்று நேரம் உட்கார்ந்திருந்து இனிமேல் சாப்பாடு கிடைக்காது என்று புரிந்து கொண்டவள் போல் தனது பாயில் முடங்கினாள்.

சின்னாயி படுத்த வேகத்தில் தூங்கிப் போனாள்.

சரஸ்வதி தன்னுடைய போர்வையால் உடம்போடு முகத்தையும் மூடிக்கொண்டாள். மூடிய கண்களுக்குள் முனுசாமி நின்றான்.

''ரத்தம் சூடா இருக்கா பார்க்கறேன்'' என்று மார்பைத் தொட்டான்.

சரஸ்வதிக்கு உடம்பு நடுங்கிற்று. பகபகவென்று அலை ஓசை அசுர கதியில் கேட்டது. சாட்டையடி போல் ஐம்புலன்களையும் தாக்கிற்று.

''சோப்புப் போட்டுத் தேய்ச்சுக் குளிச்சு இந்தப் புடவை கட்டிக்கோ!'' என்கிறாள் மாமியார். பழைய ஸில்க் புடவை. ஊதுவத்தி வாசனை வருகிறது.

புடவையின் வழ வழப்பிலும் வாசனையிலும் உடம்பில் ஒரு மையல் பரவுகிறது. இரண்டு மாத சகவாசத்தில் உடம்பின் குளிர் விட்டுப் போய், புருஷனின் ஸ்பரிச நினைப்பே கதகதப்பை ஏற்படுத்துகிறது.

சிம்னி விளக்கைச் சின்னதாக்கி விட்டு அவள் அரைகுறைத் தூக்கத்துடன் காத்திருக்கிறாள்.

அவன் உள்ளே வரும் அரவம் கேட்டதும் கன்னங்கள் சூடாகிக் கூச்சத்தில் கண்ணை மூடிக்கொள்கிறாள்.

அவனுடைய அணைப்பு இன்று வித்தியாசமாய் இருக்கிறது. புதிதாக ஏதோ வாசனை வருகிறது.

அவள் மெல்லக் கண்ணைத் திறக்கிறாள். யாரோ ஒரு அன்னியன்.

அவள் அதிர்ந்து விலகி வெளியேற யத்தனிக்கையில் கதவு வெளிப் பக்கம் பூட்டியிருக்கிறது.

''உன் புருஷனுடைய ஏற்பாடுதான் இது. அவனுக்கும் அந்தப் பொம்பளைக்கும் இதுதான் தொழில்னு தெரியாது?''

தெரியாது...! தெரியாது! அதிர்ச்சியில் மூளை ஸ்தம்பிக்கிறது.

ராட்சஸ அலைகள் கபளீகரம் செய்கையில் பாதங்களுக்கடியில் மணல் சரிந்து சரிந்து அவளை அதல பாதாளத்துக்கு இழுத்து...

நட்ட நடு நிசியில் அவள் எங்கோ ஒரே இலக்காய் ஓடுகிறாள். இருபது கல் கடந்து, பொழுது புலரும் வேளையில் அண்ணன் வீட்டுக் கதவைத் தட்டி அண்ணியின் மடியில் விழுந்ததும் 'என்ன ஆச்சு என்ன ஆச்சு?' என்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் நாக்கு மடிந்து கொள்கிறது...

சரஸ்வதிக்கு திடீரென்று விழிப்பு ஏற்பட்டது. அவள் பயத்துடன் போர்வையை விலக்கிப் பார்த்தாள். வெளி வராந்தாவின் மங்கலான வெளிச்சத்தில் அறைக்கதவு திறந்திருந்தது தெரிந்தது. சாந்தம்மாவைப் பிடித்தபடி முனுசாமியும் இன்னொரு ஆளும் வெளியேறினார்கள்.

மீண்டும் கதவு பூட்டப்பட்டது.

பார்த்த காட்சியைப் பார்த்த அசுவாரஸ்யத்துடன் சரஸ்வதி கண்ணை மூடிக்கொண்டாள்.

காலையில் பலத்த மணி ஓசையும் முனுசாமியின் அதட்டலுமாகப் பொழுது விடிந்த போது, சாந்தம்மா கட்டையாய்ப் படுத்திருந்தாள்.

குளிப்பாட்டுவதற்காக ஆயா வந்தாள் மாற்று உடைகளுடன். யாருடனும் பேசாமல் ஆட்டு மந்தையை எழுப்புகிற நினைவுடன் விலாவில் குத்தி எழுப்பினாள். குளியலறைக்குள் அழைத்துச் சென்று நீரை அவர்கள் மேல் இறைத்து ஈர உடம்பிலேயே உடையை அணிவித்தாள்.

அன்று நாஷ்டாவையும் சாப்பாட்டையும் சாந்தம்மா தொடவில்லை.

''இதுக்கு என்ன ஆயிடுச்சு இன்னிக்கு?'' என்று ஆயா வியந்தாள்.

முனுசாமி பதில் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

கங்குபாய் வந்தபோது பூட்டைத் திறந்து அவளை உள்ளே அழைத்து வந்தான்.

''ஜடம் மாதிரி குந்தியிருக்கும். அண்டா சோத்தைத் துண்ணும், -இன்னிக்கு நாஷ்டாவையும் தொடல்லே, சோறும் துண்ணல்லே!'' என்றான் அடிக் குரலில்.

கம்பிக் கதவின் மேல் ஒரு கண்ணை பதித்தபடியே கங்குபாய் பேசினாள்.

''எல்லாம் சரியாயிடும் நாளைக்கு. இப்பச் சின்னாயி அடங்கிப் போகல்லே? அங்க ஒண்ணும் முரண்டு பிடிக்கல்லியே?''

''அதையேன் கேக்கறீங்க! சரியான மரக் கட்டை. பேஜாருன்னு அந்த ஆளு திட்டினான். சொன்னதிலே பாதிதான் கொடுத்தான்.''

அவன் ஒரு பத்து ரூபாய் நோட்டை கங்குபாயிடம் நீட்டினான்.

''இவ்வளவுதானா?''

''இவ்வளவுதான். இது கிடைக்கிறதே பெரிய பாடாப் போச்சு.''

''நீ சொல்றதை நான் நம்பித்தானே ஆகணும்?'' என்று கங்குபாய் முணுமுணுத்தாள். ''அது கிடக்கட்டும். இவளையும் இப்ப விட்டுப் பிடிக்கணும் போல இருக்கு'' என்றாள்.

''நான் பார்த்துக்கறேன்'' என்றான் முனுசாமி சரஸ்வதியின் பக்கம் திரும்பி.

அன்று இரவு சொப்பன உலகத்தின் கறுத்த குகைகளில் புகுந்து புகுந்து திசை தெரியாமல் அவள் அலைக்கையில் சரஸ்வதியை முனுசாமியும் இன்னொரு ஆளும் எழுப்பி நிறுத்தினார்கள். இருண்ட நீண்ட பாதையில் மௌனமாக நடத்திப் போனார்கள்.

ஒரு கட்டிடத்தை அடைந்து ஓர் அறையின் கதவை முனுசாமி தட்டினான்.

கதவைத் திறந்தவனிடம்,

''அழைச்சிட்டு வந்திருக்கேன். ஒரு மணி நேரம் தான்'' என்றான்.

அவளை அறைக்குள் விட்டு விட்டு வெளியில் தாழ்ப்பாள் போட்டான்.

அறைக்குள் இருந்தவன் அவளைத் திருப்தியுடன் நோட்டம் விட்டான். உயிரோட்டம் உள்ளவள் தானா என்று சந்தேகத்துடன் கன்னங்களை ஜாக்கிரதையாக வருடினான். பிறகு 'உம்' என்று ஆமோதிப்பவன் போல் தனக்குள் உறுமிக் கொண்டு அவளது ஆடைகளை உருவினான்.

அவள் கண்ணை மூடிக் கொண்டாள். அலை ஓசையின் ஹுங்காரம் செவியைத் துளைத்தது. ராட்சஸ அலைகளின் ஆக்ரமிப்பில் அவள் துவண்டு போனாள். புரியாத வர்மத்துடன், வக்கிரத்துடன் விசுவரூபமாய், அசுரர்களாய் எழும்பிச் சாட்டையடி அடித்தார்கள்-எல்லாரும்-புருஷன், மாமியார், புது ஆள், முனுசாமி, கங்குபாய், டாக்டர், - எல்லாரும் - அவள் நிற்கும் இடத்தைப் பறித்தாற் போல் பாதத்துக்கடியில் மணல் வேகமாக நகர்ந்தது...

ஒரு மணி நேரம் கழித்து முனுசாமி குரல் கொடுத்துக் கதவைத் திறந்து பணத்தை எண்ணி வாங்கிக் கொண்டு மீண்டும் அவளை இருண்ட பாதைகளில் நடத்திச் சென்றான்.

பூட்டைத் திறந்து அறைக்குள் விட்டு அவள் படுத்ததும் மீண்டும் அறையைப் பூட்டி நெடிய சோம்பலுடன் படுக்கச் சென்றான்.

மறுநாள் காலை ஆயாவின் பெரிய அலறலைக் கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்து வார்டைநோக்கி விரைந்தான்.

பூட்டிய கம்பிக் கதவுக்கு முன்னால் ஒரு சிறிய கூட்டம் இருந்தது.

அறைக்குள் தரையில் சாந்தம்மாவும் சின்னாயியும் வெறித்த பார்வையுடன் உட்கார்ந்திருந்தார்கள்.

தலை உயரத்துக்கு மேல் மின்விசிறி போடவேண்டும் என்ற நோக்கத்துடன் பொருத்தப்பட்டிருந்த இரும்பு வளையத்தில் சுருக்கிட்டு சரஸ்வதி தொங்கிக் கொண்டிருந்தாள்.

''இங்கே கூட்டம் போடாதீங்க!'' என்று கங்குபாய் திடீரென்று அதட்டினாள். ''அந்த டிப்ரெஷன் கேஸெல்லாம் இப்படித்தான். முந்திகூட ஒருத்தி தூக்குப் போட்டுக்கல்லே? இதுக்கு நாம என்ன செய்ய முடியும்?''

முனுசாமி தலையைக் குனிந்து கொண்டான்.

''இந்த மாதிரி ஏதாவது செஞ்சுக்கும் என்கிற பயத்திலேதானே இதுங்களுக்குப் புடவைகூடக் கட்டறதில்லே?'' என்றாள் ஆயா. ''இதுக்கு எங்கேயிருந்து இந்தப் புடவை... அட இது வேஷ்டியில்லே? எங்கேயிருந்து எடுத்தாந்திருக்கா?''

திடுக்கிட்டுக் கூர்ந்து பார்த்த முனுசாமிக்கு மீண்டும் பேச்சடைத்துப் போயிற்று.

குமுதம் 1988

✿